விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௧.	நள ௵ ஆடி ௴ 1916௵ ஜூலை௴	பகுதி ௬.

புதல்வர் கடமை.

(125–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும், தாய் தந்தையர் ஒருங்கு சேர்ந்தும், தனித்தனியாகவும், தமது அருமை மக்கள் மீதுற்ற மெய்யன்பால், அவர்கட்குச் செய்து வரும் பலவகைய நன்மைகளையும் பகர்ந்தோம். இனி இத்தகைய பேரன்பு வாய்ந்த பெற்றோர்க்கு, அம்மக்கள் செய்தே தீரவேண்டிய கடமைகளை ஒருவாறு விளக்குவோம்:

தம்மைப் பெற்று வளர்த்து ஆதரித்து வரும் தாய் தந்தையரைத் தெய்வமாகவே கருதி, பயபக்தி விசுவாசத்துடன் வழிபட வேண்டியதே புதல்வரது முதற் கடமையாகும். இக்கடமையும் அதி பாலயம் முதற்கொண்டே அறிந்து அனுஷ்டிக்கப்பட வேண்டியதாகும். 'இளமை தொட்டே இவ்விஷயம் நன்கறியப்பட வேண்டும்' என்பதை எண்ணியே, நல்லிசைப் புலமை மெல்லியலார்களின் சிரோரத்நம் எனத்தகும் ஔவை மூதாட்டியார், சின்னஞ் சிறுவரும், பெண்ணும் பெரியரும் தத்தம் அறிவாற்றலுக் கேற்ப, எளிதிற் பொருளுணர்ந்து அனுஷ்டிக்குமாறு அருளியுள்ள 'ஆத்திசூடி'யில், "தந்தை தாய்ப் பேண்" எனக் கட்டளை யிட்டதோடு திருப்தி யுறாமல், அவ் 'ஆத்திசூடி'யின் விருத்தியே எனத் தக்க

'கொன்றை வேந்தன்' என்ற சிறு நூலில், அதன் ஆரம்ப வரியிலேயே, மக்களை அவர்களைப் பேணுதற்குத்தக்க காரணத்தையும் நன்கறிவித் துள்ளார்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் அவ் ஆரம்ப வாக்கியத்தைச் சிறிது ஆராய்வோம்: மேலெழுந்த பார்வையுடன் பார்ப்போர்க்குத் "தாயும் தந்தையும் முதலாவது அறியப்பட்ட கடவுள்" என்ற பொருளே தோன்றும். ஆயினும் அம் மகா வாக்கியத்தைச் சிறிது ஊன்றி ஆராய்வோம்:

"பிதாவும் அன்னையும் முன்னறி தெய்வம்" என்னுமல், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றதேன்? எனெனில்,

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்—செய்யதிருக்
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தருளி
'இப்பிறப்பில் தெய்வம் என' "

வளர்த்தவள் தாயே ஆதலின், அவளைப் பிறர் உதவியின்றியே குழந்தை அறிந்துகொள்ளுகின்றது. இங்ஙனம் தன்னையே முதலில் அறிந்த குழந்தைக்கு, "இவர் நின் தந்தை" என்று தாய் சுட்டிக் காட்டிய பின்னரே, அவனை அது அறிந்து கொள்ளும். இதுவே காரணம்.

இனி, இவ் விருமுது குரவரையும் "தெய்வம்" என்றதேன்? 'காண்டற் கரிய கடவுளுக்கு இருப்பதாக அறிஞர் கூறும் பல் பெருங்குணங்களில், அக்கறையுள்ள யாரும் எளிதில் அறிந்துணரக் கூடிய சில குணங்களேனும் இவர்களிடம் இருத்தலே' அங்ஙனம் கூறியதற்குப் போதிய சமாதானமாகும்:

'கடவுள், அறிவின் விளக்கத்திற்கு இன்றியமையாத சரீரத்தைத் தந்தருளியவர். தாம் படைத்த மக்களிடமிருந்து மாறுதவி கருதாது, அவர்களது அறியாமைப் பருவம் முதற்கொண்டே தமது இயற்கை யன்பாலும் அருளாலும் பேருதவி புரிந்து வருபவர். தாம் ஆக்கிய மக்கள் நல்லறிவு பெற்றுத் தமக்குப் பணிந்து நடந்து, தம்மை, 'அவர்களது நலம் பொருட்டே' அவர்கள் வழிபட்டு

உய்ய வேண்டு மென்றும், தமக்கும் பிறர்க்கும் உபயோகமாக அவர்கள் காலத்தைக் கழிக்க வேண்டு மென்றும் விரும்பி எதிர் பார்ப்பவர்." பெற்றோர்கள் தம் மக்களிட மிருந்து விரும்பி எதிர் பார்ப்பதும் இதுவே. ஆதலின் இப் பெற்றோர்களைத் "தெய்வம்" என்று உபசரித்துக் கூறியதில் தவறேதும் இல்லையே! இவர்களே கண்கண்ட தெய்வங்களாக இருத்தல் பற்றித்தான், அவர்கள் முன் 'அறி' தெய்வம் எனப் பட்டனர். நிற்க.

" 'முன் னறி தெய்வம்' என்றமை யாலே, பின்னறி தெய்வ மும்' உண்டு" என்பது பெறப்பட்டது. இப் பின் அறி தெய்வங் களைக் காட்டுவோர் அம் முன் அறி தெய்வங்களே ஆவார். என்னை மெனில், 'முன்னறி தெய்வம்' எனும் இரண்டினுமே முன்னறி தெய்வமாய் நிற்கும் தாய்மூலம் தந்தையை அறிந்தது போலவே, தந்தை மூலம் குருவை, மகன் அறிகின்றான். 'குரு' என்பதில், கு- இருட்டு; ரு- நீக்குபவன்' என்பது பொருள். ஆகையால் 'குரு' என்பதற்கு '(அக்ஞானமாகிய மன) இருளை நீக்குபவன்' என்பது பொருளாகும். இக் குருவால் அக்ஞானமாகிய அந்தகாரம் அகன் றோடியதும் மகன் ஞான ஸ்வரூபியாகிய கடவுளைக் கண்டறிவன்.

இங்ஙனம் தாயின் உதவியால் தந்தையையும், தந்தையின் உதவியால் குருவையும், குருவின் உதவியால் கடவுளையும் ஒரு வன்கண்டறிந்து கொள்ளும் முறையை எண்ணியே, "மாதா, பிதா, குரு, தெய்வம்". என அவர்களை முறைப்படுத்தி வழங்கினர் போலும்! இவை நிற்க.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றும், குரு வும் கடவுளும் பின்னறி தெய்வம்" என்றும் கூறுதலிலும், ஒரு விசேஷம் உளது: முன்னிருவரை ஒரு பிரிவாகவும் பின்னிருவரை ஒரு பிரிவாகவும் கொண்டு ஆராய்வோமேல், 'தாய் ஊன உடல் வளர்த்துத் தந்தையைக் காட்டல்போல், 'குரு, ஞானவுடல் வளர்த் துக் கடவுளைக் காட்டுகிறான்' என்ற ஸூக்ஷ்மம் வெளியாகும்.

"'மாத்ரு தேவோ பவ; பித்ரு தேவோ பவ' என்ற வேதவாக் கியங்களிலும், தந்தையை முன் கூறாது, தாயை முன் கூறியதற்குக் காரணம் நாம் முன்பு உரைத்தவைகளே யாகும். தாயை முன்னால் வைத்துக் கூறியதற்குக் குழந்தை 'தந்தையை அறியுமுன் தாயை

அறிந்து கொள்ளல்' என்ற காரணத்தைத் தவிர வேறுசில காரணங்களும் உண்டு: அவைகளிற் சிலவருமாறு:—

(1) குழந்தையைப் பெற்று அன்பு பாராட்டும வகையில், தாயினும் சிறந்தோர் எவரும் இல்லாமையே தலைசிறந்த காரணமாகும். இவ்வன்பு மிகுதி பற்றியும அவளிடத்துள்ள தெய்விகத் தன்மை பற்றியுமே,

"அன்னையா னவள் தாதைக்கும் அதிகம். 'அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்' என்ற மொழிக்கெவர் முதன்மை பூண்டார்?"

எனப் பிரபோத சந்திரோதயம் ஒருவினா எழுப்பியதோடு நில்லாது, "தந்தையினும் தாயே சிறந்தவள்" என்பதற்கு மற்றொரு காரணமுங் காட்டிக் கூறுகின்றது. அஃது என்னவெனில்,

"பின்ஓர் ஆச்சிரமத் தேகிப் பிதாவையும் வணக்கம் கொள்ளும்
சன்னியா சிகளும் அந்தத் தாயையே தொழுவர் அன்றோ?"

என்பதே. "பிதாவும, தன் மகன் சன்னியாசியாகி விட்டால் அவனை வணங்கவே வேண்டும். ஆயினும் பிதாவாலும் வணங்கப்படும் அத்துறவி, தாயை வணங்கியே தீரவேண்டும்" என்பதே இப்பொழுது கூறிய இருவரிகளின் கருத்தும்.

இதற்கு மற்றொரு உதாரணமும கூறுவாம்.— புத்திரனைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி யுற்ற விச்சுவாநரன எனனும் அந்தணனை நாரதமுனிவன் நண்ணி, மககட் பேற்றைக் குறித்து அவனுடன் சம்பாஷிக்க நேர்ந்த போது,

"தந்தைதாய் பணித்தல் செய்யும் தவம்அலால் தவம்வே றில்லை
மைந்தருக்கு) எதிகளேனும் வணங்குவர் தாயை. தந்தை
அந்தமைந் தனையே போற்ற வேண்டும். அற்றுதலின தான
சிந்தையுற் றுணரின் தாயே தந்தையிற் சிறந்தாள் மனனே

என்று கூறியதாகக் காசிகாண்டத்தில், சிவசன்மா அக்கினி லோகம் கண்ட அத்தியாயத்தில், 18-ஆவது செய்யுளிற் சொல்லப்பட்டிருக்கிறது.

பெற்றோரிடத்துள்ள அன்பு அருள் மிக்கதெய்வத் தன்மையை யாரும் அறியவே, "ஆசாரக்கோவை" என்ற ஒழுக்க நூல் இயற்றிய பெரு வாயில் முள்ளியார் என்பவர்,

வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழு தெழுக என்பதே
முந்தையோர் கண்டமுறை''

என மக்கள் நல்வழிப்பட்டு உய்யுமாறு நவின்றுள்ளார். இதன் பொருள்:—

" 'அதிகாலையாகிய பின்ஜாமத்தில் நித்திரையினின்று நீங்கி, ஒருவர் அன்று செய்யவேண்டிய புண்ணியச் செயல்களையும், அச்செயல்களைச் செய்வதற்குப் பொருள் தேடவேண்டிய நல்வழியையும் ஆலோசித்து, தக்க வழியில் தந்தையையும் தாயையும் வணங்கிப்பின்பு செய்யநினைத்த காரியத்தைச் செய்யதொடங்குக' என்பது தான், நமது (அறிவிற் சிறந்த) முன்னோர்கள் பிறர் மூலமாகவும் அனுபவ பூர்வமாகவும் கண்டறிந்த ஒழுங்காகும்'' என்பதே.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய ஐயரவர்கள் ஞாபகச் சின்னம்.

காலஞ்சென்ற உத்தம தேசாபிமானியும், சுதேச மித்திரன் முதலியவற்றை நடத்தி வந்தவருமான ஸ்ரீமத் ஜீ. சுப்பிரமணிய ஐயரவர்களை இச் சென்னை மாகாணத்திலும் பிற இடங்களிலும் அறியாதார் யார்? இவ்வுத்தம புருஷரை உலக நன்மையின் பொருட்டு அவதரித்த ஓர் அவதார புருஷர் என்றே நினைக்க வேண்டும். இவர் கல்வியின் பயனையும், பத்திரிகைகளின் உபயோகத்தையும் சகல ஜனங்களுக்கும் நன்கு விளக்கிக் காட்டியதுடன், ஆசார சீர்திருத்தம், அந்நிய தேச சஞ்சாரம், முதலியவற்றி லுள்ள விசேஷ நன்மைகளையும் வாய்மொழியால் மட்டுமன்றித் தமது நடவடிக்கைகளாலும் காட்டிப் பொது ஜன க்ஷேமத்திற்கும் பிரியத்திற்கும் பாத்திரரானவர். இவ் வுத்தம தேசாபிமானியை இழந்து விட்டது பற்றி கண் கலங்காதாரும் உண்டோ?

பூதவுடல் பொன்றிடினும் பொன்றாப் புகழுடம்புடன் விளங்கும் ஐயரவர்களின் ஞாபகச் சின்னத்தைப்பற்றி ஆங்காங்கு ஜனத் தலைவர்களும் பிரமுகர்களும் சபைகூடிப் பேசித் தீர்மானித்து நிதி சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். இச்சமயம் எல்லோரும் தத்தமது அபிப்பிராயங்களை இது விஷயத்தில் வெளியிடுவதற்குரிய சுதந்தரம் பெற்றவராவர்.

ஐயரவர்களின் சீர்திருத்த நோக்கங்கள் அளவற்றவை. அவரது தேச க்ஷேமத்தைப்பற்றிய முக்கிய தீர்மானங்களிலும் ஆராய்ச்சிகளிலும், 'ஸ்திரீகளின் தற்கால நிலைமை' என்ற விஷயமும் ஒன்றே ஆகும். ஐயரவர்கள், ஸ்திரீகளின் அபிவிருத்தியைக் குறித்து ஆரம்பத்தில் செய்த விசேஷ காரியங்களை நாம் மறக்க முடியுமோ?

ஐயரவர்களின் ஞாபகச்சின்ன நிதி நாளுக்கு நாள் அதிகரிக்கவே செய்யும் என்பதில் ஐயம் இல்லை. இந் நிதியைக்கொண்டு, அவரது உருவச் சிலை நிறுத்துவதிலும், புத்தக சாலையொன்று ஏற்படுத்துவதிலும், அயல்நாடு சென்று கைத்தொழில் கற்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் (Scholar-ship) கொடுப்பதிலும், வெகு மும்முரமாக முயற்சிகள் செய்யப்படுகின்றன.

தேச க்ஷேமத்திற்கும், தேசநன்மையை நிலைப்படுத்துவதற்கும் ஆடவர் பெண்பாலர் ஆகிய இருவர்களும் சம பாத்தியதையும் பொறுப்பும் முயற்சியும் கொண்டவர்கள் என்பதை இச்சமயம் மேதாவிகளாகிய சமூகத் தலைவர்கள் பேசி வருகிறார்கள். "ஞாபகச் சின்னம்" என்பது, "காலஞ்சென்றவர்களின் ஞாபகத்தின் பொருட்டும், அவர்களது நற்குண நன்முயற்சிகளை இதரர்களுக்கு என்றென்றும் நினைப்பூட்டுவதற்கும்" ஏற்படுவதாகும்.

நமது சென்னை ராஜதானியில் கீர்த்தியை நிலைநிறுத்திச் சென்றோரது பெயரால் பல ஞாபகச் சின்னங்கள் சமயோசிதமாக ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும், இதுவரை ஸ்திரீ ஜனங்களுக்கு நன்மையையும், பிரயோசனத்தையும் விளைவிக்கக் கூடிய ஸ்தாபனங்கள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஸ்திரீகளின் படிப்பு எவ்விதம் இருக்க வேண்டுமென்று துரைத்தனத்தாரிடமிருந்து கேள்வி பிறந்து, ஜன ஸமூகத் தலைவர்களால்

தீர்க்காலோசனை செய்யப்படும் இச்சமயம், நமது ஐயாவர்களின் ஞாபகர் சின்ன நிதியிற் சரிபாதியை ஸ்திரீகளது நன்மையின் பொருட்டு உதவவேண்டியது சர்வஜன ஸம்மதமாயும், சமயோசிதமாயும், புகழுலகில் சிறந்திச் சென்ற ஐயாவர்களது ஆத்மாவிற்குத் திருப்தியாயும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஸ்திரீகளின் படிப்பு விஷயமாக அபிப்பிராய பேதம் இல்லாமல் இருக்கவில்லை; பெண்களின் கல்விமுறையெல்லாம் சுயபாஷையில், கூடிய சீக்கிரம் அவர்களுக்கு ஏற்படும் இல்லாண்மைக்கு அநுகூலமாக இருத்தல் அவசியம். இதனுடன் குடும்பத்திற்கும், சில சமயம் ஜீவனத்திற்கும் பயன்தரக் கூடியதாக ஏதேனும் ஓர் கைத்தொழிலையும் அவர்களுக்குப் பயிற்றுவித்தல் பயன் தருவதாகும். ஆடவர்களும் கல்வி முறையிலேயே வெகுதூரம் சென்று, தற்காலம் கைத்தொழில் தான் முக்கியமென்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள்.

எவ்வளவு முயன்றாலும், அல்லது சௌகரியங்கள் ஏற்பட்டாலும் ஹிந்து மாதர்கள் அதிகமாகப் படிப்பது பதினான்கு வயதளவே. ஆகவே இப்பதினான்கு வயது வரையே படிக்கக் கூடிய பெண்களுக்குச் சுயபாஷையிலும் ஏதேனும் ஓர் கைத்தொழிலிலும் பயிற்சி பெறவே காலம் இருக்கும். ஆதலின் இக்காலத்திற்குள்ளேயும் கைத்தொழிலும் இல்லாண்மையும் கற்கத் தக்க ஓர் பெண்பாடசாலையை நமது ஐயாவர்கள் பெயரால், நமது மாகாணத்தின் தலை நகராக இருக்கும் சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்பது எமது துணிபும், விருப்பமும் வேண்டுகோளுமாகும். இதுவே ஷை ஞாபகச்சின்ன நிதித்தலைவர்கள் நன்கு யோசிக்க வேண்டிய விஷயம்.

"ஸ்திரீகளுக்குக் கைத்தொழிற் சாலை மட்டும் தனியாக இருத்தல் சிலாக்கியமா? அல்லது சிறுமியாது பிரதமப் படிப்பாகிய குடும்பப் படிப்புடன் சேர்ந்து போதித்தல் நன்மையா?" என்பதை நமது சகோதர சகோதரிகளும் நன்காராய்ந்து தமது அபிப்பிராயங்களைப் பத்திரிகை மூலமாக வெளியிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம். இவ்விதம் ஓர் பாடசாலை ஏற்பட்டுவிட்டால் அதனால் உண்டாகும் அளவற்ற நன்மையையும் பயனையும் கண்டு, அது

போன்ற பல பாடசாலைகளை ஏற்படுத்தத் துரைத்தனத்தார் பின் வாங்க மாட்டார்கள்.

நமது சகோதரிகளும் ஆங்காங்கு ஸபை கூடி ஆலோசித்து, இவ்விஷயத்தை உறுதிப்படுத்தி நமது ஆலோசனையை ஆமோதிக்கத் தவற மாட்டார்களென்றே உறுதியாக எண்ணுகிறோம். ஸ்ரீமத் ஐயரவர்களின் ஞாபகச் சின்ன நிதித் தலைவர்களும், அவரது ஆப்த நண்பர்களும் எமது நல்யோசனையைக் கவனித்து, ஆய்ந்து, இக்காரியத்தை நிலைபெறச் செய்யக் கடமைப் பட்டவர்களே என்பதை ஞாபகப்படுத்துகிறோம. இந் நற்காரியம் இனிது நிறைவேற இறைவன் திருவருள் புரிவாராக

வி. பாலம்மாள்,
உப-பத்திராதிபர்.

விடுகதை வினாவுக்கு விடை.

விரிதமிழ் மணங்கமிழ் விவே கோதயமே!
பட்சிகள் போல்மர உச்சியில் உள்ளதும்
முக்கணன் என்ன அக்கமூன் றுடையதும்
கார்மே கம்போல நீர்தோய்ந் துள்ள தும்
இருடிபோல உரிபோர்த் திருப்பதும் தேங்காய்
என நடராஜற கியம் பிடுவாயே.

P. R. விசுவநாதன்,
சாதனூர.

'மிக்க மரக்கிளையின் மீதிருக்கும்' என்றகவிக்
கொக்கவிடை ஈதுவிவே கோதயமே!— தக்கோர்கள்
ஆவகாய்ந்து தேவர்க் கமுதளித்துக் கைகூப்பும்
தேங்காயே ஆகுமிது தேர்.

இராமாராவ்
பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, காசி.

சர்வ சமயத்தைப் பற்றியும் பகவான் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும் ஓர் சம்பாஷணை.

(138-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இராமாநந்தர்.— ஹிந்து மதத்திற் பிறந்து பல புராணங்களைப் படித்திருக்கக் கூடிய நீரே ஸ்ரீ பகவான் விஷயத்தில் இவ்விதம் சந்தேகப் படுவீரானால் மற்ற மதஸ்தர்கள் பகவானைத் தூஷிப்பதற்குக் காரணமுங் கேட்க வேண்டுமோ?

சுந்தரசாஸ்திரி.— நான் புராணங்க ளொன்றும் வாசித்தவனல்லன் வேதாத்தியயனம் செய்திருக்கிறேன்.

இராமாநந்தர்.— வேதத்திற்குஅர்த்தம் விசாரித்திருக்கிறீரா?

சுந்தரசாஸ்திரி — அர்த்தம் தெரியாது. வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டிய விதமாய் வேதாத்தியயனம் செய்திருக்கிறேன். உபாத்தியாயர், அதாவது, புரோகித விர்த்தியை அநுசரித்து வருகிறேன். நான் சாஸ்திரம் வாசித்தவன் அல்லன். இந்த மாதிரி என்னைக் கேள்வி கேட்டுப் பரிகாசம் பண்ணாதேயும். என் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும். உமக்குப் புண்ணிய முண்டு.

இராமாநந்தர்.— விஷ்ணுவின் அவதாரத்தைப் பற்றி ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிற தென்று நீர் கேட்டதில்லையா?

சுந்தரசாஸ்திரி.—பாகவதர்களால் செய்யப்பட்டு வரும் பஜனைகள் சிலவற்றிற்குப் போயிருக்கிறேன். அப்பொழுது பாகவத புராணமென்று ஒன்று இருப்பதாகக் கேள்விப்பட் டிருக்கிறேனே தவிர, ஸ்ரீ கிருஷ்ணபகவான விஷயமாய் எனக்குள்ள சந்தேகங்களை நான் அந்தக் காலத்தில் தெரிந்து கொள்ளக் கூடவில்லை.

இராமாநந்தர்.— சொல்லுகிறேன் கேளும்: ஸ்ரீ கிருஷ்ணபகவான் விஷ்ணுவின அவதாரமதான் இதில் உமக்குச் சந்தேகம் வேண்டாம். இவர் 5000 வருஷத்துக்கு முன் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனத்துக்காக அவதாரம் செய்தவர். அந்தக் காலத்தில் அர்ஜுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு உயர்ந்த தத்துவங்களை

உலகத்தார் அறிந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு வெளியிட்டிருக்கிறார். அதைத் தான் "பகவத்கீதை" யென்று சொல்லுகிறோம். கிருஷ்ண பகவானது உபதேசம் வீணாகப் போகுமா? முன்னர் நான் சொன்னபடி பல பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டு உலகத்தில் பல தேசத்தார்களால் விசுவாசத்துடன் படிக்கப்பட்டு வருகிறது.

சுந்தரசாஸ்திரி.— அப்படியானால் அவரைத் தூஷிப்பானேன்?

இராமாநந்தர்.— உலக சரித்திரத்தை விசாரிக்கப் புகில் இப்படியே ஞானோபதேசகர்கள், அவர்களது ஜீவ திசையிலேயே அவமதிக்கப்பட்டு வந்தது தெரியவரும். கிருஷ்ணபகவானைத் துரியோதனன், சிசுபாலன் முதலியவர்கள் அவரது ஜீவிய திசையிலேயே அவமதித்துப் பேசியிருக்கிறார்கள். விசிஷ்டாத்துவித மதத்தை ஸ்தாபித்தருளிய ஸ்ரீ இராமாநுஜாசாரியர், சைவ மதஸ்தர்களால் தூஷிக்கப்பட்டு ஒருசமயம் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிப் பல இடங்களுக்கு ஓடி ஒளிந்து கொண்டதாகத் தெரிகிறது

இப்போது உலகத்தார் மெச்சும் அத்துவைத மதத்தை ஸ்தாபித்த ஸ்ரீமத் சங்கராசாரியரது தாயார், நிரியாணமடைந்த காலத்தில், அவரது ஜனன கிராமத்திலுள்ளவர்கள் இப் பரமாசாரியருக்கு உதவிசெய்ய மறுத்ததுமன்றி அவமானமுஞ் செய்ததாக வெளியாகிறது.

இன்னும், மகமதிய மதத்தை ஸ்தாபித்தவரான மகமது நபி மெக்காவிலிருந்து மெடினாவுக்கு, நின்ற இடத்தில் நில்லாமல் ஒரு சமயம் ஓடும்படி நேரிட்டதென்று தெரிகிறது.

கிறிஸ்துநாதர், யூதர்கள் வம்சத்திற் பிறந்தவர். அவரை அவ் யூதர்களே கொன்றார்கள். அவர் மதமோ இப்பொழுது ஐரோப்பா, அமெரிகா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் விஸ்தாரமாகப் பரவி யிருக்கிறது.

ஸாக்ரடீஸ் என்பவர் வெளியிட்ட தத்துவங்களை அந்தக் காலத்திய கிரீக் தேசத்தவர்கள் நம்பாமல் பாஷாணத்தைக் கொடுத்து அவரைக் கொன்று விட்டார்கள். இன்னும் அநேக திருஷ்டாந்தங்

கள் சொல்லலாம். சொலலப் புகின் விரியும். சொன்ன திருஷ்டாந்தங்களே மனிதரின் சுபாவததைக் காட்டப் போதியவை யனறோ?

சுந்தரசாஸ்திரி.— நல்லது, கிருஷ்ணபகவான் வெண்ணெய் திருடினுரெனறும், ஸ்திரிகளுடன் லீலை யாடினுரென்றும், மனிதர்களைப் பிசகான வழியில் நடததினுரென்றும் சொல்லுகிறாகளே, அதைப்பற்றி விவரமாகச் சொல்லும.

இராமாநந்தர்.— ஸ்ரீகிருஷ்ணபகவான் தம் சிறு பிராயத்திலேயே உயாநத தத்துவங்களைப் பாமர ஜனஙகளுக்குத் தமது நடத்தையிலேயும, உபதேசத்திலேயும, வெளியிட்டிருக்கிறார். சிலருக்குத்தான் அவர் விஷ்ணுவின் அவதாரமென்பது தெரியும். மற்றவர்கள அவரைச் சரியானபடி அறிந்தார்களில்லை. அவர் வளர்ப்புத் தாயாகிய யசோதையும் அவரைச் சரியானபடி அறியவில்லை. ஒரு சமயத்தில அவர் வாயைத திறந்த காலத்தில 14 லோகங்களும் அவர் வாய்க்குள காணப்பட்டதைக் கண்டு வியப்படைந்த யசோதை அவர் வாயை மூடியவுடன், சாதாரணக் குழந்தையென்றே ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பாவித்து விட்டதாகப் பாகவதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இது மாயையின் செய்கை. ஆத்மஞானிகள் அல்லாதவர்கள் அவதார புருஷர்களின் யதார்தத ஸ்வரூபத்தை அறிந்து கொள்ளாதபடி மாயை மயக்கி விடுகின்றது.

சுந்தரசாஸ்திரி.— என்ன நான் கேட்டதைப்பற்றிச் சொலலாமல் மாயையைப்பற்றி பேசுகிறீர். வெண்ணெய் திருடியதைப் பற்றிச சொல்லும்.

இராமாநந்தர்.— "வெண்ணெய" எனற பதத்திற்குப் "பாலிலிருந்து அல்லது தயிரிலிருந்து எடுககப்படும் வெண்ணெய்" என்று நீர் அர்த்தம் செய்து கொண்டிருக்கிறீர். அந்த அர்த்ததத்தில் அப்பதத்தைப் பாகவதத்தில் உபயோகிகக வில்லை. பாகவதம முதலிய புராணங்களைச் செய்த வேதவியாசா வெளிப்படையாக ஒரு அர்த்தமும் உட்புகுந்து பார்ப்பவர்களுக்கு உயர்ந்த தத்துவங்களைக் கொடுக்கக் கூடியதுமான சொற்களால் ஒரு அர்த்தமும், விளங்கும்படி அக் கிரந்தத்தில் உபயோகப்படுத்தி யிருக்கிறார் வெண்ணெய் என்பதைப் பற்றிக் கைவல்ய ஞானசிரியர் அடியிற் கண்டபடி விவரிக்கிறார்.

> "படர்ந்தவே தார்தம் என்னும் பாற்கடல் மொண்டு, மூன்னூற்
> குடங்களில் நிறைத்துவைத்தார் குரவர்கள் எல்லாம். காய்ச்சிக்
> கடைந்தெடுத்த தெளித்தேன. இந்தக் கைவல்ய நவநீதத்தை
> அடைந்தவர், விஷய மண்ணின் றலைவரோ பசியிலாரே?"

"ப்ரஹ்மம்" என்னும் காமதேனுவிற் சுரந்த 'சுருதிகள்' என்னும் பாலை, 'விசாரம்' என்னும் அக்கினியால், 'பூர்வபட்சம்' என்னும் நீர் சுண்ட, 'சித்தாந்தம்' என்னும் மதுரம் மிக்க காய்ச்சி, விருத்திஞானம் என்னும் பிரையிட்டு, 'உபதேசம்' என்னும் மத்திட்டு, "அனுபவ ஆராய்ச்சி' என்னும் கடைதலைச் செய்து, அதில் எழாநின்ற 'கைவல்ய' மென்னும வெண்ணெயை, அனுபவித்தார்கள். 'நித்யத் திருப்தி' யாகிய பசியில்லாத் தன்மையடைந்து, 'விஷயானந்தமாகிய மண்ணைத் தின்னார்கள்.' இதனால், 'வெண்ணெய்' என்ற பதத்துக்கு, 'கைவல்யநிலை' அதாவது 'மோக்ஷநிலை' என்று அர்த்தமாகிறது. ஒவ்வொரு ஜீவனும் இந்தக் கைவல்யத்தை அடைய சுதந்திரமுண்டு. "தேகமே ஆத்மா" என்று பிதற்றி, அஞ்ஞானமாகிற அந்தகாரத்தில் மூழ்கியிருக்கிற மூடர்களிடமிருந்து, அவர்கள் அந்த ஸ்திதியிலிருககிற வரையில் அவர்களுக்குச் சித்திக்கமாட்டாத கைவல்ய வெண்ணெயை, எல்லாம் அறிந்த பகவானான ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடமிருந்து திருடுகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தில், "திருடிய வெண்ணெயைக் குரங்குகளுககு ஊட்டுகிறார்" என்று கூறப்பட்டிருக்கிறது. குரங்குகள் சுபாவமாகவே சஞ்சல முடைய பிராணிகள். சவன புத்தியுடைய மானிடர்களே இக்குரங்குகள். அவர்களுக்குத் தீர்க்காலோசனையின பேரில், 'தேகம நானல்ல' என்ற ஞானமிருக்கிறது. ஆனால் 'ஆத்மா யார்?' என்று தெரியாமல் சஞ்சலபபட்டுக்கொண்டிருக்கும் மானிடர்களுக்குக் கைவல்ய வெண்ணெயை ஊட்டுகிறார என்று அர்த்தம் ஏற்படுகிறது. இதின் தத்துவம் "பரம்பொருள் ஞான ஸ்வரூபி" என்ற ஞானம், பிரபஞ்ச வாழ்க்கையில் அபிமான மூடர்களுக்குக் கிட்டாது என்பதே. ஆனால் அதை அறியப் பிரயத்தினப் படுகிறவர்களுக்குக் கிட்டும் என்பதைப் பகவான் பால்ய லீலையால் விளக்குகிறார்.

சுந்தரசாஸ்திரி— கிருஷ்ண பகவானது பால்ய லீலையில் உயர்ந்த தத்துவம் ஏற்பட்டிருப்பதை இப்பொழுதே உணர்ந்தேன்.

இவ் வுண்மை அறியாமையின் என்னைப்போன்ற பாமர ஜனங்கள் அவரை "வெண்ணெய் திருடி" யென்று சொல்வது பிரமப அநியாயம். நான் இதுவரை இதைப்பற்றி விசாரிக்காமலிருந்தது என் தவறே.

இராமாநந்தர்.— ஒருவரைப்பற்றித் தூஷிக்கு முன் அவர் செய்கைகள் முழுமையும் படித்தும் கேட்டும் தெரிந்துகொள்ள வேண்டும். கிருஷ்ணபகவான் அவதரிக்கு முன்னமேயே 'அவர் அவதரிக்கப் போகிறார்' என்ற சங்கதி, அக் காலத்திய ஜனங்களுக்குத் தெரியும். அவர் பிறந்த பிற்பாடும் அநேக அற்புதங்களை செய்தா ரென்றும் தெரிகிறது. இப்பொழுது, அவரது, ஜனன பூமியான இந்தியா மட்டிலுமல்ல, பற்பல தேசங்களிலும் அவரால் வெளியிடப்பட்ட கீதையைப் படித்து அவரைப் போற்றி வருகிறார்கள்.

(இன்னும் வரும்.)

கிருஷ்ணாநந்தன்.

கமலாவதி.

அங்கம்–II.

காட்சி-2.

(145–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இடம்.— கேகய நாட்டு அரண்மனையை யடுத்த ஓர் பூஞ்சோலை.
காலம்.— மாலை.

[ஸ்ரீதரன் மாறு வேடத்துடன் உலாவிக் கொண் டிருக்கிறான்.]

ஸ்ரீ. (தனக்குள்) ஜயகேசரி என்வரவை எதிர் பார்த்துக்கொண் டிருப்பான். நான் சீக்கிரம் மாளவ நகருக்குத் திரும்பி வருவதாகச் சொல்லி வந்தேன். தவிரவும், என் தந்தையினுடைய அநுமதியின்றி இங்கு வந்தேன். நான் இங்கு

இனித் தாமதிப்பது சரியல்ல. வாஸ்தவந்தான்—, என்ன இருந்தாலும் அப் பெண்ணெதிரிற் செல்ல எனக்குத் தைரியம் வரமாட்டேனென்கின்றதே. ஆஹா! நான் நினைத்த படியே அவளும் என் பேரில் காதல் கொண்டிருக்கிறாள் என்பதை நான் அறிந்து கொண்டேன். தினந்தோறும், அவளும் என்னை நினைந்து நினைந்து வாடுகின்றாள். இதைப் பிரத்யக்ஷமாகப் பார்த்தாயிற்று. எப்படியும், இன்றைய தினம் அவள் முன்பாகச் சென்றே தீருவேன். அவளுடைய தோழியும் தினந்தோறும் அவளுடன் வருகின்றபடியால், சம்பாஷிக்க சமயம் வாய்க்கமாட்டேனென்கின்றது. அவள் ஏனோ இன்னும் வரவில்லையே? வருகின்ற சமயந்தானே இது? இன்னும் சற்று நேரம் இருந்து பார்க்கின்றேன்.

[மறுபடியும் உலாவிக் கொண்டிருக்க, சற்று நேரத்தில், கமலாவதி பிரவேசிக்கிறாள்.]

ஆஹா! என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இன்று அம் மாது சிரோமணி, தனிமையாக வருகின்றாள். அம்மட்டும் நான் பாக்கிய சாலிதான். நான் ஒருபுறமாக மறைந்து இருந்து விஷயத்தைக் கவனிக்கின்றேன்.

[ஓரிடத்தில் மறைந்து கொள்ளுகிறான்]

கம. [ஓர் ஆசனத்தின்மீது வீற்றிருந்து தனக்குள்] என் தந்தையினுடைய அபிப்பிராயம் எப்படியிருக்கின்றதோ இவ்விஷயத்தில்? நான் ஸ்ரீகரரை— ஆஹா! ஸ்ரீகரர்! ஸ்ரீகரா! இத் திருநாமம் அவருக்கே தகும்.

ஸ்ரீ. [ஒருபுறமாகத் தனக்குள்] கமலாவதி யென்னும் நாமதேயமும் உனக்கே தகும். இருக்கட்டும். இன்னும் என்ன நடக்கின்றதோ பார்ப்போம்.

கம. அம் மஹானுபவரை நான் மணந்து கொள்வதைப் பற்றி என் அன்னைக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை யென்றும், இவ்விஷயத்தில் என் தந்தையையும் இணங்கும்படி செய்வதாகவும், என் தன்னை தன்னிடத்திற் கூறியதாக நீலாள் சொன்னது உண்மையாக இருக்குமா?— நீலாள் சாமர்த்

்கியசாலி. அவள் சொன்னது உண்மையாகத் தானிருக்கும். உண்மையாய் இருந்து விட்டால், நான் பாக்கியசாலி யென்பதில் தடையென்ன இருக்கிறது?

[ஸ்ரீ தாரனுடைய பாதத்திற்கு ஓர் முத்தமிட்டு]

இதே மாதிரியாக, ஆஹா! நான் அவரையே முத்தமிடும் காலம் என்று வாய்க்கப் போகின்றதோ?

[திடீரென்று தனக்குள்]

சீ! கமலாவதி! ஏன் வீணாக மனோராஜ்யம் செய்கின்றாய்? உன் தந்தை ஒருக்காலும் நீ ஸ்ரீதாரரை மணக்கச் சம்மதியார் ஒருக்கால் சம்மதித்தாலும், அம் மஹானுபாவர் உன்னை ஏற்றுக் கொள்ள வேண்டுமே!

ஸ்ரீ. [ஒரு புறமாகத் தனக்குள்]

ஹா! கண்ணே! நானு உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டேன்?

[மாறு வேடத்தைக் கலைத்து]

நான அவள் முன்னிலையில் செல்லுகிறேன். எப்படிச் செல்வேன்? எனக்குத் தைரியம் உண்டாகவில்லையே! (சற்றுத் தாமதித்து) அவளை நான் பாராதது போல நடித்துக் கொண்டு இம்மறை விடத்திலிருந்து வெளிபடுகின்றேன்.

[அப்படியே செய்கிறான்.]

கம. (நடுக்கத்துடன்) யாரோ வருகிறது போலிருக்கின்றதே! அவனுக்கு இங்கு என்ன வேலை? நானிங்கிருந்தால் எனக்கு அவனால் ஏதேனும் ஆபத்து நேரிட்டாலும் நேரிடலாம். நான் இங்கிருப்பது சரியல்ல. கட்டுக் காவலுடன் உள்ள அரண்மனையைச் சார்ந்த இவ்விடத்தில், தைரியமாக யார் பிரவேசிக்கக் கூடும்?

[கவனமாகப் பார்த்து]

ஹா! இதென்ன, நான் காண்பது கனவோ? என் காதலர் மாதிரியாக வல்லவோ யிருக்கின்றது? ஆம், சந்தேகமில்லை. அதோ, அவர் தனக்குள் ஏதோ பேசுகின்றார்! என்னவென்று கவனிக்கிறேன்.

ஸ்ரீ [கமலாவதி காதில் விழும்படி தனக்குள்]

கமலாவதி! பெண்கள் நாயகமே! தினந்தோறும் நீ இங்கு தானே உலாவ வருவது வழக்கம். இன்றுநீ இன்னும் வராத தன் காரண மென்ன? உன்னை மணக்கத்தான் எனக்குப் பாக்கியம் இல்லை. உன் அழகிய முகத்தை நேரில் பார்த்தாவது திருப்தியடையலா மென்று இங்கு வந்து கொண்டிருக்கிறேன். தினந்தோறும உன் முகாரவிந்தத்தைப் பார்ப்பதினாலேயே என் உயிர் உடலைவிட்டுப் பிரியாமலிருக்கின்றது.

கம. (தனக்குள்) எல்லாவற்றிற்கும் கடவுளிருக்கின்றார். அக் கடவுளுக்கும், என்பேரில் கிருபை இருக்கின்றதுபோலிருக்கின்றது அவரே என் காதலரை என்முன்பாகக் கொண்டு வந்து விட்டிருக்கின்றார் போலும்! ஹா! பிராண—நான் தங்களைப் 'பிராணநாதா' வென்று அழைப்பதற்குத் தகுதி யானவளோ?

ஸ்ரீ. [கமலாவதியின் சமீபத்தில் வந்து திடுக்கிட்டவன் போல் அபிநயித்து]

பெண்ணே! இந்த இடம் ஸ்திரீகள் சஞ்சரிக்கும் இடம் என்பது எனக்குத் தெரியாது. என களைப்பை ஆற்றிக் கொள்ளலாமென்று, இப்பூஞ்சோலையில் பிரவேசித்தேன். என் பிழை பொறுப்பாயாக.

கம. அரசே! தங்களை மன்னிக்கத் தகுந்தவள் நானோ?

ஸ்ரீ. நான் செய்தது தவறுதலாகையால், நீஎன்னை மன்னிக்கத் தான் வேண்டும்.

கம (புன்சிரிப்புடன்) ஒருவன் ஒருகாரியத்தை அறியாமற் செய்தானே யானால், அவனைமன்னிக்கலாம். அறிந்து செய் தவனை என்ன செய்யலாம்?

ஸ்ரீ. நீ சொலவதொன்றும் எனக்குப் புலப்படவில்லையே?

கம. எப்படிப் புலப்படும் தங்களுக்கு? தாங்கள் உண்மையாக அறியாமலா இங்கு பிரவேசித்தீர்கள்? பிராண— ஸ்!— அரசே! என்மனதைத் தாங்கள் பரிசோதித்தது போதும். தங்களுடைய அபிப்பிராயத்தை நான் அறிவேன்.

ஸ்ரீ. என்னுடைய அபிப்பிராயம்—உனக்கு—உம்—உம்—

கம. போதும், போதும், தாங்கள் இன்னும் என்னை—

ஸ்ரீ. என்ன, நீ சொல்வது எனக்கு ஒன்றும்—

கம. தாங்கள் என்னை அன்று அன்புடன் நோக்கியதை, என்றும் மறவேன். அன்றே நான் தங்களையே என் காதலராக வரித்து விட்டேன்.

ஸ்ரீ. நீ வீணாக என்னைக் காதலிப்பது சரியன்று. உன் தந்தைக்கும் இவ்விஷயத்தில் சம்மதம் இருந்தாலன்றோ நீ என்னைக் காதலித்தது சரி. அவருடைய சம்மதம் எப்படியோ? யார் கண்டார்கள்?

கம. என் தந்தைக்குச் சம்மதம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. நான் தங்களையே—

[வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறாள்]

ஸ்ரீ. அப்பா! ஸ்திரிகளுக்கு இருக்கும் மனோதைரியம் புருஷர்களுக்கு ஒருக்காலும் இருக்கிறதில்லை. நான் என் கருத்தை உன்னிடம் அறிவிக்க மனம் கூசிகின்றது. நீ தைரியமாய் உன் கருத்தை உள்ளபடி வெளியிட்டு விட்டாயே.

கம. தங்களை எப்பொழுது கணவராகக் கருதினேனோ, அப்பொழுதே தாங்கள் என் மணவாளராகி விட்டீர்களே. ஆகையால், நான் தங்களிடம் கருத்தை வெளியிடப் பயமென்ன?

ஸ்ரீ பெண்மணி! உன் மனதைச் சோதித்தேன். வேறு வித்தியாசமாக எண்ணிவிடாதே. நான் சத்தியமாகச் சொல்லுகின்றேன். உன்னையன்றி, வேறெவர் முகமும் நான் பாரேன்.

கம. இதனினும் பாக்கியம் எனக்கு வேறு எது?

ஸ்ரீ. கண்ணே! கடவுள் நம் இஷ்டத்தை நிறைவேற்றத் திருவருள் புரிவாராக. [ஓர் திக்கைக் காண்பித்து] அதோ! யாரோ வருவது போலிருக்கின்றது! நான் இனி இங்கிருப்பது சரியன்று. நான் செல்ல விடையளிப்பாய்.

கம. தங்களை மறுபடியும் எப்பொழுது தரிசிப்பேனோ? தாங்கள் அணிந்திருக்கும் கணையாழியையாவது கொடுத்துச் சென்றால் அதை எப்பொழுதும் கண்குளிரப் பார்த்தாவது, தங்களைப் பிரிந்த துயரத்தை ஒருவாறு ஆற்றிக் கொள்வேன். (கண்ணீர் விடுகிறாள்)

ஸ்ரீ. இதுவென்ன பைத்தியம்! ஏன் அழுகிறாய், இந்தா கணையாழி.

[தன் கணையாழியை அவளிடத்தில் கொடுத்து]

அஃதிருக்கட்டும். நான் உன்னை விட்டுப் பிரிந்திருப்பதனால் என்மனம் மட்டும் கேட்குமோ?

கம். (புன்சிரிப்புடன்) நான் கேட்டதன் பிறகுதான் என்னுடைய கணையாழியைக் கேட்கிறதாக்கும்?

[தன் கணையாழியை ஸ்ரீதரனிடத்தில் கொடுக்கிறாள்.]

ஸ்ரீ. சரி, அதோ! யாரோ வந்துவிட்டார்கள். நான் இங்கு இருக்கக் கூடாது. போய்வருகிறேன்

[ஸ்ரீதரன் செல்லுகிறான்]

கம. அப்படியே.நல்லவேளையாய் அதோ! நீலாள்தான் வருகின்றாள். வரவர இருட்டிக்கொண்டு வருகின்றது. நான் அவளை அழைத்துச் செல்லுகிறேன்.

[ஓர்புறமாகச் செல்லுகிறாள்]

காட்சி முடிகின்றது

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

கற்பூரம்.

இது அதற்குள்ள இனிய மணம் பற்றிக் 'கனசாரம்' என்றும், மாநிலத்திருள் அகற்றும் மதி போன்று, மாந்தர் மன இருள் நீக்கி மதி அருளும் பான்மையாற், 'சசி' என்றும், 'சூடு அகம் உறைதலாற்' 'சூடன்' என்றும், இவை போன்ற பிறகாரணங்களால் 'பனிதம்' என்றும் பல்வேறு நாமங்கள் பெற்றுளதாகும்.

இது வெகு காலமாக, நம் நாட்டிற்குச் சீனம் முதலிய பிரதேசங்களிலிருந்து ஏற்றுமதியாகி வருகிறது. இவ் வுண்மை,

"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,
காலின்வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்,
கங்கை வாரியும் காவிரிப் பயனும்,
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும்"

என உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையில் "அரியவும்" என்பதற்கு உரையாசிரியராகிய "உச்சிமேற் புலவர் கொள்" நச்சினார்க்கினியர், "'சீனம்' முதலிய இடங்களினின்றும் வந்த கற்பூரம், பனிநீர், குங்குமம், முதலியனவும்" என்று பொருள் கூறியதால் விளங்கும்.

இதனைச சமயா சமயங்களில் ஒட்டிக் கிரட்டி விலை கொடுத்தேனும் வாங்கிப் பூஜாகாலங்களில், சிறிது உபயோகப் படுத்தமட்டும் நம் முன்னோர்க்குததெரியும், இதை அயல் நாட்டார் செய்யும் விதமும், இதன் பிற உபயோகங்களும் இவர்கள் அறிந்திருந்ததாகத் தெரிய வரவில்லை.

சீனா, ஜப்பான், பார்மோஸா முதலிய இடங்களில் கற்பூர விருக்ஷங்கள் வானுற ஓங்கி வளம்பெற வளர்கின்றன. ஆல விருக்ஷமென அகன்றும், சவுக்கென உயர்ந்தும், வளரும் இம் மரங்களின் அடிமரம், கிளை, இலை, மூலம் முதலியவற்றைக் கொண்டு, அவை உற்பத்தியாகும் தேசத்தார் கற்பூரம் செய்து வருகின்றனர். ஆனால் சில காலமாக கற்பூரத் தைலம் (Turpentine) என்னும எண்ணெயின் உதவியால் 'பதில் வெட்டு' ரூடன் ஒன்று செய்ய ஐரோப்பியர் கண்டு பிடித்திருக்கின்றனர். இத்தைலம் கடைகளில் அதிமலிவாக அகப்படும் காலத்தில்தான் இதுசெய்ய அவர்களுக்குப் பெரும்பாலும் சௌகரியமாக இருக்கும். அத்தைலம் குறைந்த விலைக்குக் கிடைப்பதில்லை. நிற்க.

இம்மரங்களை இருவகையிற் பயிர் செய்வார்கள். அவற்றுள் ஒருவகை வருமாறு.—

சுமார் எழுபது, எண்பது ஆண்டுகட்குக் குறையாது வளர்ந்த பெருமரக் காய்களைக் கோல் கொண்டு அடித்து வீழ்த்துவர். பிறகு அவற்றைப் பொறுக்கி, சுத்த ஜலம் விட்டுக் கழுவிப் பாய்களிற் பரப்பி, நிழலுள்ள இடங்களில் நாலைந்து பகலேனும் உலர்த்துவர். அதன் பின்

னர் அத்துடன் வெண் மணல் கலந்த, புழுக்கள் செல்லாப் பூமியின் உட்புறம் புதைத்துப் பழைய தாக்குவர். இவற்றை வசந்தகாலத்தில் தோண்டியெடுத்துக் களிமண் நிலத்தில் ஊன்றுவர். இரண்டொரு வருஷம் இவற்றிற்கு அடிக்கடி நீர் பாய்ச்சல் வேண்டும்.

மற்றொரு விதமாவது.— வயல்களில் நாற்றை வேரோடு களைந்து நடுவதுபோல, முதல் முதல் ஓரிடத்திற் பயிரைக் குவியலாக உண்டாக்கி, பின்னர், அவற்றைப் பிடுங்கி வெவவேறு இடங்களில் ஒவ்வொன்றாக ஊன்றுதலே.

இவற்றுள் முன்னைய விதமே பயிர்கள் சிறப்பாகவும் சீக்கிரமாகவும் வளர்வதற்கு ஏற்றதாகும். மட்டான சீதோஷ்ண பூமிகளில், அதிலும் மலைப்பிரதேசங்களில் இத் தருக்கள் ராக்ஷஸ வளர்த்தி கொண்டு அபரிமிதமாகப் பலன் கொடுக்கின்றனவாம்.

நம் நாட்டில் உதகமண்டலம் (நீலகிரி), கல்கத்தா, சிலோன் முதலிய இடங்களில் சிறிது சிறிது இம்மரம் பயிராக்கப்பட்டு வருகிறது.

(இன்னும் வரும்.)

ரெங்க வி. நாதனார்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(142-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பார்த்தனம்பால் வீழ்பொழுதும் பார்அளந்தா னுக்குநெய்த்தோர்
வார்த்தளித்தான் கன்னனறம் வள்ளுவரே!— வாய்த்தக்கால்
அன்(று) அறிவாம் என்ன(து) அறஞ்செய்க மற்(று) அது
பொன்றுங்கால பொன்றாத் துணை. (கூ)

(அ-ம் முதலியன):— பார்த்தன் – பிருதை (குந்தி)யின் புத்திரன்: அர்ச்சுனன் நெய்த்தோர் – இரத்தம், அறம் – புண்ணியம், கன்னன்–கர்னன், வாய்த்தக்கால் – சமயம் வாய்த்த பொழுது, அன்று – (இறக்கும் பொழுது): பிற்காலத்தில், அறிவோம்– செய்வோம், என்னது – என்று எண்ணமல், செய்க–தினந்தோறும் செய்க, அது– அங்ஙனம் செய்த அறம், பொன்றுங்கால்–(சரீரம்) அழியும் பொழுது, பொன்ற–அழியாத.

கர்ன்ன் பாரளந்தோனுக்குப்புண்ணியம் கொடுத்தது:—இடையெழு வள்ளல்களில் ஒருவனும் குந்தியின் விவாஹ காலத்துக்கு முன் அவளுக்கு, சூரியனது அநுக்ரஹத்தால் பிறந்தவனுமான இவன், துர்யோதனனது தோழமை பெற்று அங்க தேசாதி பதியுமானவன். வள்ளன்மையிற் சிறந்த இவனது புண்ணியபலத்தால், அதி வீரனான இவன் துணை நின்ற துரியோதனனுதியர்க்கு ஜயம் கிடைத்து வந்தது கண்டு, கிருஷ்ணன் துரியோதனனுக்கு அபஜயம் உண்டாக்கக் கருதியும், கன்னனைப் பெருமைபடுத்த எண்ணியும் அந்தண வடிவங் கொண்டு அவனது புண்ணியத்தை அவன் பார்த்தன் அம்பால் அடிபட்டுக் குற்றுயிராய்க் கிடக்கும் சமயத்திற் சென்று யாசித்தான். யாசிக்கவே, தன்னிடத்தில் அச் சமயத்தில் உள்ளதைக் கேட்டதற்காக கன்னன் மகிழ்ந்து, தன் உடலில் தைத்த அம்பைப் பிடுங்கி, அப்பொழுது வெளிப்பட்ட ரத்தத்தையே, நீராகக் கொண்டு கிருஷ்ணனுக்குத் தாரை வார்த்து,புண்ணியத்தை அளித்தான்.

இல்லம் பொருள் ஈவால், ஏனை அறம் துன்புறலால்
வல்ல எனிற்பயனென் வள்ளுவரே!— சொல்லால்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடை (எ)

(அ-ம் முதலியன.) — இல்லம்- இல்லறம், ஈவால்- ஈதலால், ஏனை அறம்- மற்ற அறம்: துறவறம், துன்புறலால்- சரீரத்தை வருத்தித் தவ ஒழுககத்தில் நிற்றலால். வல்ல-வலிமையொடு சிறந்தவை அறத்து ஆறு- தருமத்தின் பயன், சிவிகை- பல்லக்கு, பொறுத்தான்-சுமப்பவன், ஊர்ந்தான்-சவாரி செய்பவன், இடை- இடத்திற் (கண்டறிக.)

"தருமத்தின் பயன் இதுவென்று நூல் முதலியன கொண்டு அறிவிக்க வேண்டியதில்லை.பல்லக்குச் சுமப்போனையும் ஏறுவோனையும் கண்டு நேரில் தெளிக" என்பதே குறளின் கருத்து.

இல்லற வாழ்க்கைக்கு மேன்மை விருந்தோம்பல் முதலியன. துறவறத்திற்கு மேன்மை தவம். இவ்விரு ஆசிரமத்தாரும், தத்தமக்குரிய அறத்தைத்தவருது கைக் கொண்டொழுகி வந்தவர்களாதலின்,பல்லக் கேறும் பாக்கியம் பெற்றார்கள். இவ்வறத்தினின்றும் வழுவியோர் பல்லக்குப் போகிகளாயினர் என்பது விளக்கம்.

பார்க்கண் பிறவார் பதினு றகவையொடு
மார்க்கண்டர் வாழ்வதென்னே? வள்ளுவரே!—நோக்கியே
வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல். (அ)

(அ-ம் முதலியன.):— பார்க்கண்-பூமியில், பிறவார்-பிறவாதவராகி; அகவை- வயது, வீழ்நாள்- நன்மை ஏதும்செய்யாது வீணிற கழித்தநாள் படாஅமை-உண்டாகாமல்,நன்று-புண்ணியச்செயலை,ஆற்று-செய்,அஃது அச்செயல், வாழ்நாள் வழி- இனிப்பிறந்து வாழும நாளினது வழியை.

மார்க்கண்டர் 16-வயதுடன் வாழ்ந்தது —மிருகண்டு என்ற முனிவர்க்கு மார்க்கண்டேயர் என்ற ஒருமகன் உண்டு. இவர்க்கு 16 வயதே ஆதியிற் கொடுபட்டிருந்தது. அஃதுணர்ந்து மிக வருந்திய தம் பெற்றோரது வருத்தம் நீங்குமாறு இச் சிறுவர் சிவஸ்தலங்கள் தோறும் சென்று அர்ச்சனை செய்து வந்தனர். திருக்கடவூரில் இவர் சிவார்ச்சனை செய்துகொண்டிருந்த போது, இவரது முடிவு நாள் வந்து விட்டதையுணர்ந்த யமன், இவரது ஆவியைக் கவர்ந்து வரும்படி தனது தூதரை அனுப்ப, அவர்களால் முடியாமற் போகவே, தானே சென்றான். மார்க்கண்டேயர் அவனைக் கண்டதும் அஞ்சிச் சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொள்ளவே யமன் வெகுண்டு, பாசக்கயிற்றை அவர் மீது வீசி, சிவலிங்கத்துடன் அவரைச் சேர்த்து இழுத்தான். உடனே அவ் விலிங்கத்தினின்றும் சிவன் வெளிவந்து யமனை உதைத்து வீழ்த்தி, இவர்கு "என்றும்" பதினாறு வயதருளினார். இதுவே இவர் சிரஞ்சீவியான விவரம்.

காடுசென் றும் இன்புற்றார் கௌந்தேயர், கௌரவரோ
வாடினர் நாடுகொண்டும்; வள்ளுவரே!— நாடின்
அறத்தான் வருவதே இன்பம்; மறறெல்லாம்
புறத்த; புகழும இல. (சு)

(அ-ம் முதலியன)·—கௌந்தேயர்- குந்தி மக்கள்· பாண்டவர், புறத்த-இன்பத்திற்குப் புறம்பான துன்பத்துட் சேர்வனவாகும்; புகழும்இல- கீர்த்தியும் உடையன ஆகா.

பாண்டவர் இன்புற்றதும், கௌரவர் வாடியதும்:— கௌரவர்கள் தமதுசிறிய தந்தையின் மக்களான பாண்டவர்பாற் பொறாமை கொண்டு, அவர்களை நயவஞ்சகமாக வரவழைதது, மாயசூதாடி, சகுனியின் கபடத்தால் வென்று, அவர்கட்குரிய ராஜ்யத்தைக் கைப்பற்றினர். அத்துடனும் நில்லாது 'பெண்ணீர்மை குன்றாப்பெருந் திரு'வாகிய துரௌபதியை மான பங்கம் செய்ய முயன்றும் அவள், தனது கற்பு வலியாலும், ஈசுவர பக்தியாலும், அவ்விடை யூறினின்றும் தப்பி, மறுசூதாடிப் பாண்டவர்கள் பறிகொடுத்த யாவையும் மீண்டும் திருப்பிக் கொண்டாள். ஆயினும் துர்யோதனாதியர், பாண்டவர்களுக்குரிய தாயபாகத்தை அப்பொழுதும் அளிக்காமல், 'அவர்கள் 12வருடம் வனவாசமும், ஒருவருஷம் 'அக்ஞாத' வாசமும் செய்து திரும்பினால் தான், அவர்களுக்கு நாடு கொடுபடும்' என்

றனர். அவர்கள் இப் பதின் மூன்று வருஷத்தையும் ஒரு குறைவு மின்றி இனிது முடித்த விஷயம் யாவரும் அறிவர். "ஸ்ரீ ராமன் போன இடம் எல்லாம் திரு அயோத்தி என்பதற் கேற்ப, பாண்டவர் சென்ற இடமெல்லாம் மகாத்மாக்களும் சென்றனர். அவர்களுக்குத் துரௌபதியின் கற்பு வலியால் அக்ஷய பாத்திரம் முதலியன கிடைத்தன. சுருங்கச் சொல்லின் அவர்கள் காட்டிலிருந்த போதிலும், நாட்டிலிருந்ததைவிட அதிக மன அமைதியும் மகிழ்ச்சியும்கொண்டு இன்புற்றிருந்தனர். துர்யோதனனோ பொறாமைப் பேய் பிடித்தோர்களாதலின், "அழுக்காறுடையார்க்கு அது சாலும் ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது" என்பதற் கேற்ப, அவர்களது துரோக சிந்தையும் சூழ்ச்சியுமே அவர்களை வாட்டி வருத்தின. சித்திரசேனனால் அவர்களுற்ற அவமானமும், தாம் ஏவிய காளமாமுனியே தான் தோற்றுவித்த பூதத்திற் கிரையானதும், துர்வாச மாமுனியை வேண்டித் தாம் பாண்டவர் பால் அனுப்பிய எண்ணம் பலியாமற் போனதுமே அவர்களை வாட்டி வருத்தப் போதியவையன்றோ?

'என்தலைநீ கொள்க' எனக்குமணன் வாள் கொடுத்தும்
வன்தலைகொள் சாத்தார் வள்ளுவரே!— என்றும்
செயற் பால(து) ஓரும் அறனே. ஒருவற்(கு)
உயற் பால(து) ஓரும் பழி. (ம)

(அ-ம் முதலியன.):— வன்தலை-வலியதலை, சாத்தர்-பெருந்தலைச் சாத்தனார், செயற்பாலது-செய்யத்தக்கது, அறன்-புண்ணியம், உயற்பாலது- ஒழிக்கத் தக்கது, பழி-தீவினையே, 'ஓரும்' இரண்டும் அசை.

குமணன் தன்தலையைக் கொள்ளச் சாத்தர்க்கு வாள் கொடுத்தது:— தொண்டை நாட்டு முதிரமலைக்குச் சிற்றரசனும் முதல் ஏழுவள்ளல்களில் ஒருவனும், தமிழ்க் கவிஞரைப் பரிபாலித்து வந்தவனுமாகிய இவன், தனது தம்பியான இளங் குமணனது வஞ்சனையால் வனமுற்றவன். காட்டிக்குக் குமணனை ஓட்டியதோடு திருப்தியுறாமல், அவனது தலை கொணர்வோர்க்குக் கோடிப்பொன் தருவதாக இளங் குமணன் அறிவித்து மிருந்தான். இச்சமயம், பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் தமது வறுமைப் பிணிக்கு வருந்திக் காடு சென்று, அங்கிருந்த குமணனிடம் தமக்குள்ள குறைகளைக் கூறிக் கண்ணீர் விட, அவ் வள்ளல் மன மிரங்கி "அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்! இந்த நாள் வந்து நீ நொந்தனை அடைந்தாய்" என்று வருந்திப் பின்பு அவரை நோக்கி "ஒருகாரியம் செய்; இக்கணமே நீ என்

"தலைதனைக் கொடு போய் என்றன் தம்பிகைக் கொடுப்பாயாயின்
விலையெனச் செம்பொன் கோடி மிகமகிழ்ந் தீவான் கோடி."

ஈது நீ செய்யின், நின்னை இன்னல் செய் கலியும் வீயும்;
ஓதியஎம்பி உன்னத் தோங்கிய கவலும் நீங்கும்;
மேதகு புகழும் மேலாம் வீடும் எற் கெய்தும் கண்டாய்.
ஆதலால் இதனின் மேலாம் அறமும்ஒன் றில்லை'' யென்ன

உரைத்துக் கைவாளீந்து சென்னி தாழ்ந்தான். ஆயினும் புலவர் அதனை மறுத்து, ஓர்புத்தியால் அவனை உடன்படுத்தித் தாமும் பழிக்குள்ளாகாது அவனும் உயிர் துறவாது தப்பினர். குமண வள்ளலது அதி அற்புத சரித்திரத்தையும் புலவரது பெருந்தன்மையையும் அறிய வேண்டுவோர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றியுள்ள 'குமணசரித்திரம் பெற்று' படித்து மகிழ்க.

(இன்னும் வரும்)

ம. கோ.

ஆத்திசூடி வெண்பா.

(111–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆவி அகலும் அமையத்தும் தான்இழைத்த
ஓவிலாப் புண்ணியங்கள் உற்றளித்தான்— மேவும்
அயர்வகலக் கன்னன் அழியாப் புகழோ(டு)
'இயல்வ துகரவேல்' என்.

[(பதவுரை):— கன்னன் – சூரிய குமாரனாகிய கன்ன மகாராஜன், ஆவி–உயிரானது, அகலும்– (அருச்சுனனால் யுத்தகளத்தில் அடிபட்டுத் தேரிற் சாய்ந்து) நீங்கும்படியாக விருந்த, அமையத்தும்–(மரணாவஸ்தையான)சமையத்திலும், மேவும்–பொருந்திய, அயர்வும்–(இந்தவேதியருக்கு இப்படிப்பட்ட தருணத்தில் யாது கொடுக்க வல்லோம் எனத் தன்னுள் தோன்றிய) துன்பமானது, அகல– நீங்கும்படி, தான் இழைத்த–தான் செய்திருந்த,புண்ணியங்கள்–(வரையாது கொடுத்துக் கொடுத்தீட்டிய) நன்மைப் பயன்கள் அனைத்தையும், அழியா– கெடாத, புகழோடு– கீர்த்தியோடும், உற்றளித்தான்– மனம் இசைந்து கொடுத்தான், (ஆதலினால்): இயல்வது– (இடம் பொருள் ஏவல் இல்லாவிடத்தும்) தன்னால் அளிக்கக் கூடியதை, கரவேல்–மறையாதே, என்– ஔவையார் அருளிச் செய்த இந் நீதிமொழியை (மறவாமல்) நினைப்பாயாக.]

கொடையின் தன்மையை நன்குணர்ந்தவர்கள், அதனை, எவ்விடத்தும், எத்தருணத்தும், எவ்வாற்றானும் மனமுவந்து, மேற் கொள்வதே யன்றி, இடம் பொருள் ஏவல், தன்னலம், முதலியன நோக்கி மறுத்திடத் துணியார். "மனமுண்டேல் வழியுமுண்டு" என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்துவதாம். 'இல்லை' யென்பது மனத்தின் வறுமையைக் காட்டுவதன்றி, பொருளின் நிலைமையைக் குறிப்பதன்றாம்.

போர்க்களத்தில் தன்னெதிர்த்த சத்தவீரனால் அடியுண்டு, 'மறுகணத்தில் இவ்வுலகை நீக்கப் போகின்றோம்' என்னும் உண்மை யுறுதி தேறிய வுள்ளத்தில், இரந்து வந்த வேதியர்க்குத் தான் இழைத்த புண்ணியங்களை யெல்லாம மகிழ்ச்சியோடும் தத்தம் செய்யக் கருதி, அதனை 'வாக்காற் கூறுவதும் அமைவுடைத்தன்று' என்பது தோன்றவும், ஆன்றோரது தத்தம் செய்யும் முறையைத் தான் எந் நிமித்தம் பற்றியும் புறக்கணித்தல் பொருந்தா தென்பதனைக் காட்டவும், தன் உடலில் தைத்திருந்த அம்பினை வாங்கி, அதன்வழிப் பெருகிய இரத்த நீரால் தத்தம் செய்தமையும், ஈண்டு அரிதினுமரிய உட்குறிப்பாகும்.

கோபத்தாலும் வருத்தத்தாலும் கொதித்து நோதலுற்றிருக்கும் தருணமே பரம சாந்தமாய், புண்ணியக்கொடையை உவப்புடனும் முறைப்படியும் மேற்கொள்ளவும் உரிய தாயிற்று என்பதே சத்தவீரத்திற்கேற்ற இலக்கணமுமாகும். இது பற்றியே மற்றக் கொடையாளிகளினும் கன்னன் சிறப்புற்றான் என்று அறிக. ஆகவே, ஒளிக்கும் எண்ணம் இல்லாவழி, உதவும் பொருளும் எவர்க்கும் அரிதன்றென்பது தோன்றும். மனதார ஒன்றை மறைப்பதினும் பெருந்தவறும் வேறொன்றின்றாம். அத்தகையார்க்குக் கடவுளின் கருணையும் மறைபொருளே யாகு மென்பது கூறாமலே விளங்கும்.

'மனதறிந்து மறைப்பதில்லை' யென்னும் ஓர் உறுதியை இளமை தொட்டு மறவாப் பயிற்சியாக மேற் கொண்டால், நாளடைவில் அவ்வொரு குணத்தினாலேயே கர வொழிந்து, காத்தலுக் கிடமாகிய ஏனைய எல்லாப் புன்மை யொழுக்கங்களும் எண்ணங்களும் கெட்டு, உண்மையும் ஒழுக்கமும், மேன்மையும் நாளடைவிற் சிறந்து உயர் நிலை யெய்து விக்கும் என்பதும் தேற்றம்.

அசலாம்பிகை அம்மாள்.

சாணக்கிய சாகஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(109-ஆம்பக்கத் தொடர்ச்சி)

ராக்ஷஸன் தான் பெற்ற எல்லாக் கடிதங்களையும் நந்தர்களுக்குக் காட்டி, அவர்கள் சம்மதத்துடன் ஒரு கடிதம் எழுதி, ராஜமுத்திரையிட்டு, அதை உடனே காசிராஜனிடம் சோப்பிக்கும்படி அவனது ஆட்கள் மூலம் அனுப்பினான். அக்கடிதத்தில், காசி ராஜன் பர்வதேசனுக்கு உதவிசெய்வது போற சென்று,நயவஞ்சகத்தால் சந்திரகுப்தனைக்கொல்ல வேண்டுமென்றும், அல்லது மலயகேதுவைக் கைதி செய்தாவது பாடலீபுரத்திற் கனுப்ப வேண்டுமென்றும், எழுதப்பட்டிருந்ததுடன் அங்ஙனம் செய்வதற்கான யுக்திகளும் குறிக்கப்பட் டிருந்தன. பாடலீபுரத்திலிருந்து இக்கடிதம் பெற்றதும், காசி மன்னன் கமலாபீடனை வரவழைத்து, "ஐயா, பர்வதேசருக்கு உதவியாக நாம் நாளைப் புறப்படுவதாக அவர்க்குக் கடிதம் எழுதி விடுக" என்றான்.

அதற்கு நியோகி, தங்களைத் தக்கமரியாதையுடன் அழைத்துச் செல்ல எங்கள் அரசரே நேரில் வரக் கூடும். இல்லையேல், அவர் சந்திரகுப்தனையாவது மலயகேதுவையாவது அனுப்புவர். ஆதலின் தங்கள் சம்மதித்த சுப செய்தியை அவர்க்கு அறிவித்தவுடன் புறப்படலாம்" எனச் சாணக்யன் தனக்குக கற்பித்தவாறே கூறினான். அரசனும் சம்மதித்தான்.

நியோகி தன் விடுதி வந்ததும, நிகழ்ந்த யாவையும் ஒன்றுவிடாமல் சாணக்யனுக்கு ஓர் கடிதம் மூலம் அறிவித்தான். சாணக்யன், யுத்த வேளையில் காசிராஜனையும், பிற மன்னரையும், நந்தர் சைனியத்துடன் சேரவொட்டாது ஆங்காங்கு நிறுத்திக்கொள்வதறகாகத் தான் செய்த யுக்தி பலித்தமைக்கு மகிழ்ந்தான்.

கமலாபீடனும், காசி ராஜன் தன்னை அழைத்து "உங்களரசரிடமிருந்து கடிதம் வந்ததா?" என்று கேட்குந்தோறும், தனது யுக்திவலியால் தாமதத்திற்குப் பற்பல பொருத்தமான சமாதானங்கள் கூறி அரசனையும் அவனது சைனியத்தையும் காசியிலேயே பல நாள் நிறுத்திக் கொண்டும், சாணக்யனது வெற்றியையும் ஆக்ஞையையும் எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

இந்தியரின் நாகரிகம்.

(127–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இது காறும் பொதுவாக நாகரிகம் இன்ன தென்பதும், இந்தியரென் பார் யாவரென்பதும் கூறப்பட்டன. இனி இந்தியரின் நாகரிகம் இருப்புப் பாதைமுதலிய சௌகரிய மில்லாத பூர்வகாலத்தில எங்ஙிலையில் இருந்த தென்பதைச சிறிது எடுத்து எழுதுவாம். நாகரிகம் மிகுவதற்குக் காரணம் வியாபாரம், கல்வி, கைத்தொழில், தேசப் பாதுகாப்பு, அரசாட்சி முதலியனவாம். இவற்றுள் முதலிற் கூறப்பட்ட வியாபாரத்தைப் பற்றி எனது சிற்றறிவிற் கெட்டிய மட்டிற் சிறிது எழுதுகிறேன்.

வியாபாரம்.

ஒரு தேசத்தினது பொருள் வருவாய்க்கு முக்கிய ஸாதகம் வியாபாரம் என்பதும், 'அது சிறப்பதற்கு அதிமுக்கியமாய் வேண்டியது கடற் பிரயாணமும் மரக்கலப் பயிற்சியும என்பதும் யாவரும் அறிந்தவிஷயம். கடற்பிரயாணத்திற் பணம் விரயம செய்யாது, உள்ளூரிலேயே தம பொருள்களை வியாபாரம் செய்யலாமே யெனின், பொருள்களின் ஆவசயகமும் அருமைப்பாடும் அவற்றோடு சதாகாலமும் பழகுவோர்க்குத் தெரியாது. அவை கிடையாத இடங்களில இருபபோர்க்கே தெரியுமாதலால் என்க. உதாரணமாக: நாம் ஸர்வ சாதாரணமாகத் தேங்காயை மதிக்கிறோம். இத் தேங்காய் உள்ளூரில் அதிகமாய் விலைப்படாமல் வெளியூரில் விசேஷமாய் விலைப்படக் காரணம் என்ன? அதினின்றும் வெண்ணெய் எடுக்கப் படும் சூட்சமத்தை நாம் அறியவில்லை. அந்நிய நாட்டார் அறிவா. ஆதலின் அது அதன் அருமை பெருமை யறிந்த அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. அவ்வூர்களில் தேஙகாய் கிடையாக் குறையால் தான் அவர்கள், அதற்கு அதிக விலைகொடுத்து வாஙகுகிறார்கள்.

இனி இக்கப்பல் வியாபாரததில நம்மவா இருநத சீரிய நிலையைச சிறிது ஆராய்வாம். இவ வியாபாரத்தின் பொருட்டே வைசியர் என்ற ஒரு ஜாதியார் பொருள் வருவாய் கருதி "திரைகடலோடியும் திரவியம் தேடிய" விஷயம் பண்டைத் தமிழ்நூல் பயின்றோர் அறிவர். இவாகள் தம் தேசத்திய இயற்கைப் பொருள்களையும, தாம் அவற்றினின்றும் உண்டாக்கிய செயற்கைப் பொருளகளையும் பிறதேசஙகட்கனுப்பிப் பொருள சேகரித்த காரணததாலேயே அரசரால் நனகு மதிககப் பெற்று எட்டிப் பட்டமும் அதற்குரிய எட்டிப்பூவும் அடைந்தனா. இவ்விஷயம் மணிமேகலை சிறைசெய்காதையில் (௧௧௧–௧௧௪) வரிகளில், தருமதத்தன் என்னும் வணிகனைப்பற்றிக கூறப் பெறும் விஷயததா லறிக.

இவர்கள் மரக்கலப்பயிற்சியில மிக்கோராய இருந்தனர் என்பது 'கலஞ்செய் கம்மியா' 'கலம்புணர்மாக்கள்' என்பவைபோன்று மணிமேகலையில் வரும் தொடர்மொழிகளாலறியப்படும். நிற்க.

பிறதேசங்களிலிருந்து வந்த பொருள்களை இறக்குமதி செய்யவும் உள்நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும், பண்டசாலைகள் பல

துறைமுகங்களுக்கு அருகில் கட்டப்பட்டிருந்த விஷயம் பட்டினப்பாலை (௧௨௯-௧௩௨) வரிகளில் உள்ள

நீரினின்று நிலத்(து) ஏறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
வரம்பறியாமை வந்தீண்டி

என்ற அடிகளால் அறியலாகும். இனிப் பிறதேசங்களிலிருந்து இறக்குமதியாகிய பொருள்கள "காற்றினுதவியால் கடல் மார்க்க மாய்க் கப்பலில் வந்த வேகமிக்க குதிரைகளும், கரிய மிளகுப் பொதிகளும், தென் கடல் முத்தும், வங்காளக்குடாக் கடலில் பிறந்த பவளமும் கங்கா நதியில் அடித்துக்கொண்டு வரப்பட்ட யானை, மாணிக்கம், முத்து, பொன் முதலியனவும், காவிரியிற் றோன்றுவனவாகிய சந்தனம், அகில், முதலியனவும், ஈழமண்டலத்தி லுண்டாகக் கூடிய உணவுப் பொருள்களும், கடாரத்தில், அதாவது பாமாவில் உண்டான நுகர்ச்சி பொருள்களும், சீனதேசத்திய கர்ப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும்" என்னும் உண்மையைப பட்டினப் பாலையில் ௧௮௫ ஆவதுஅடி முதற் கூறப்பட்டுள்ள சில வரிகளைக் கொண்டு அறியலாகும.

(இன்னும் வரும்.)

நா. கனகராஜையர்.

விநோதக் கூற்று.

சேது நாட்டிற்கு அரசராகி இருந்த ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களால் அபிமானிக்கப்பட்ட பலருள் வேம்பத்தூர்ப் புலவர் பிச்சுவையரும் ஒருவர். யாதோ ஒரு காரணத்தால் சேதுபதி யவர்கள் புலவரை நோக்கி "நீர் என்னிடம் இருப்பது சரியன்று" என வெகுண்டு உரைக்க, அவர் "அரசே! தாம் சொலவது தவறு. அரசை விட்டு வேம்பு அகலாதே" என்று சமயோசிதமாகக் கூறினாராம்.

சேதுவேந்தரால் கூட்டப்பெற்றவித்வத் சபைக்கு, இப்புலவர் காலந் தாழ்த்து வந்து, அவர் பக்கத்திருந்த ஆசனமொன்றே காலியிருக்கக் கண்டனர் என்றும், தம்போல் வந்தோர் யாவரும் உட்கார இடமின்றி நின்று கொண்டிருந்த சமயத்தில், இவர், "அரசுக்குப் பக்கத்தில் வேம்பு இருத்தலே பொருததம" எனக் கூறி சபையோர் வியக்க அவ்வாசனத் தமர்ந்தனர் என்றும் சொல்லுகிறார்கள்.

வே. முத்துஸாமி ஐயர். M. A. L. T.

எட்டயபுரத்தில் கடிகைமுத்துப் புலவர் என்பவர் எட்டப்ப மகாராஜாவால் அபிமானத்துடன ஆதரிக்கப் பட்டு வந்தவர். இப்புலவர்க்கு இறுதி காலம் சமீபித்தது. அப்பொழுது அவரது பிரிவாற்றாது அவரது மக்கள் "அப்பா நீ போனால் எங்களுககு இனி யார் கதி?" என்று ஏங்கிப் புலம்பினர். இறக்குந் தறுவாயில் இருநத புலவர் உடனே "மூடமக்காள்! எட்டப்பன் இருக்கையில் ஓரப்பனுக் கழுவானேன்?" என்று தம் மக்களைத் தேற்றினர். எட்டப்பராஜன் இவரது இக்கடைசி மொழியை நினைந்து மனங்குருகி அவரது மககளைக் காப்பாற்றி வநதனராம்.

அ. ம. துரைசாமி ஐயர், B. A.

சமாசாரக் கொத்து.

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி காலக்ஷேபம்.— மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தார் ஸ்ரீ ராவ சாஹிப் ப. சம்பந்த முதலியாரியற்றிய "காலவ ரிஷி" என்னும் நாடகத்தை நடித்துக் காட்டுவார்கள்.

அழகியநல்லூர் செந்தமிழ்க் கலாசபை:—இதன் 3-ம் வருஷோத்ஸவம் ஸ்ரீ திருமலைப் பட்டாச்சார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீ. வே. முத்துசாமி ஐயர் எம். ஏ., எல். டி, யின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. விவரம் அடுத்த சஞ்சிகையில் அறிவிக்கப்படும்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்.— இவ்வருடத்திற்கு ஸ்ரீ ப. ரா. ஐயாசாமி ஐயர் பி. ஏ. உப—அக்கிராசனாதிபதியாகவும், ஸ்ரீ நா. கனகராஜையர் காரியதரிசியாகவும், ஸ்ரீ க. சுப்பராவ் நிதித்தலைவராகவும், ஸ்ரீ நா. வேங்கடராவ் புத்தகசாலைத் தலைவராகவும். ஸ்ரீ வி. கு. நடராஜன் பத்திரிகாசாலைத் தலைவராகவும், ஸ்ரீ ரா. நாகசாமி கணக்குப் பரிசோதகராகவும், ஸ்ரீ ஸ்ரீநிவாசவரதன் உதவி—புத்தகசாலைத் தலைவராகவும், ஸ்ரீ மு. ராஜகோபாலன். பொருள் காப்போராகவும், சபையோரால் சமீபத்திற் கூடிய கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்டனா. இவர்களுடன் ஸ்ரீ: ஜி. தண்டபாணி, கே. வி. ராமசாமி, வி. மீனாக்ஷிசுந்தரம், பி. சுந்தரராஜன், ஸ்ரீ. ரங்கசாமி, எம். ஏ. நாராயணசாமி ஐயர் ஆகிய இவர்கள் ஏனைய நிர்வாக சபையோராகவும் நியமிக்கப்பட்டனர்: நிற்க.

சென்ற வருஷத்தில் ஸ்ரீ ப. ரா. ஐயாசாமி ஐயர் பிஏ. ஸ்ரீ: பி. சுந்தரராஜன், ஸ்ரீநிவாசவரதன், செ. குப்புசாமி, ரா. நாகசாமி, மு. இராஜகோபாலன் ஆகிய இவர்கள இச்சங்கத்தில் மிக்க ஊக்கம் காட்டி உழைத்துவந்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம். இனியும் இப்பெருமை குன்றுது அவர்கள் உழைப்பார்களாக.

வள்ளல் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ், அவர்களது பொருளுதவியால், மதுரைத் தமிழ்ச்சங்கமுத்ராசாலையில் அச்சாகி வெளிப் போந்த ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் இயற்றிய அரும் பொருட்டிரட்டில் ஒருபகுதியும், ஸ்ரீ மு. இராகவையங்கார் இயற்றிய 'சேரன்—செங்குட்டுவ' னுமே, 1918ஞ இன்டர் மீடியேட் வகுப்பிற்கு வசன பாட புத்தகமாக, சர்வகலாசாலையால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள விஷயமறிந்து மகிழ்கிறோம். இவ்விரண்டும் மதுரைத் தமிழ்ச சங்கக் காரியதரிசியான ஸ்ரீ டி. ஸ்ரீ. ஸ்ரீநிவாசையங்காரவர்களின் ஆங்கில முகவுரை கொண்டவை. முன்னையது மகிபாலன்பட்டி மகாவித்வானும் வடமொழி தென் மொழி வல்லுநருமான ஸ்ரீ மு. கதிரேசச செட்டியார் அவர்களது தமிழ் முகவுரையுடனும் கூடியது. முந்தியதன் மூன்றுபாகமும தபாற்கூலி முதலியன உட்பட ரூ 2—8—0. இன்டர்மீடியேட்பாடப் பகுதி மட்டும் 10—அணா. சேரன் செங்குட்டுவன் விலை ரூ 1. இப்புத்தகங்கள் யாவும் எம்மிடம் கிடைக்கும்.

வருஷோத்ஸவம்.— கண்டவராயன்பட்டியில் உள்ள கற்பக. விநாயக ஞானபோதசங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவுக்கொண்டாட்

டம், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் அக்ராஸநாதிபதியும், "விவேகோதயப்" பத்திராதிபருமான ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களின் அக்ராஸநாதிபத்தியத்தின் கீழ், ஆகஸ்ட்மீ 20, 21உகளில் நடைபெறும். அப்பொழுது பல வித்வான்கள் அரிய உபந்நியாசங்கள் புரிவார்.

பரமக்குடி உபாத்திமை சங்கம்:— இதன் வருஷோத்ஸவம் ஆனிமீ 2உ வியாழக்கிழமை சிவகங்கைப் பாடசாலைகளின் உதவிப்பரிசோதகராகிய ஸ்ரீ பி. ஏ. நாராயணையர் எம். ஏ. யின் அக்ராஸநத்தின் கீழ்க்கொண்டாடப்பட்டது. அன்று ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள், "ஆசிரியர் கடமை"யையும் ஸ்ரீ நா. கனகராஜையர் "மாணவர்கடமை"யையும் பற்றி உபந்யஸித்தனர். பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டு சபை இனிது நிறைவேறியது. புலவர் பலர் மங்கலவாழ்த்துக் கூறினர்.

விரலோட்டி உபாத்திமை சங்கம்:— இதன் வருஷோத்ஸவம் அருப்புக்கோட்டைப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் உதவிப்பரிசோதகராகிய ஸ்ரீ வே. முத்துசாமி ஐயர் எம். ஏ. எல். டி. யின் அக்ராஸநத்தின் கீழ் வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. தேகப் பயிற்சிக்கான பல வகை விளையாட்டுகளும் அப்பியாசங்களும் நிறைவேறியவுடன், மதுரை ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள், ஸ்ரீ முத்துசாமி ஐயரவர்களது விருப்பின்படி மாலைக்கூட்டத்தில் அக்ராஸநம் வகித்துப் பரிசளிப்பதன் நோக்கத்தையும், தேகாப்பியாஸத்தையும் பற்றிக்கூறி, பல கலாசாலை மாணவர்களுக்கும் அவர்களுடைய தகுதிக்கேற்ப சபையோரால் குறிக்கப்பட்டிருந்த பரிசுகளை அளித்தனர். அநந்தரம் கூறப்பட்ட மங்கல வாழ்த்துடன் சபை கலைந்தது.

பரிதாபமரணம் — மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் கௌரவ அங்கத்தினருள் ஒருவரும், சேதுபதிஹைஸ்கூல் உபாத்தியாயரும், நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்னசபையிற் சேர்ந்தவருமான ஸ்ரீ மி. சு. ராமநாதையரவர்கள், ஏதோ மனஸ்தாபத்தால் தம் வீட்டினின்றும் தமது 5-வயதுள்ள மகனோடு சென்ற மாதம் திஉ சென்று வேற்றூர் சென்றனர். சென்ற இரண்டொரு நாளைக்கெல்லாம் இவ்விருவரது பிரேதமும் ஆனைமலைக் கடுத்த பொய்கையில் மிதந்தன.

மேலச் சிவபுரி சன்மார்க்க சபை — இதன் ஏழாவது வருஷோத்ஸவம் கயப்பாக்கம் ஸ்ரீ சாதாவசெட்டியார் அக்கிராசனத்தின் கீழ் ஜூலை மீ 4, 5உகளில் விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. பல வித்வான்கள் அரிய உபந்யாசங்கள் புரிந்தார்கள்.

ஓர் அபிமான நன்கொடை:— இச் சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீ கே. வேங்கடராமையர் தமது விவாகதினத்தன்று ஆசார்ய சம்பாவனை கொடுக்கும்பொழுது, "நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்ன நிதிக்கும் ஒரு ரூபாய் உவந்து அனுப்பியது பற்றி மகிழ்கின்றோம். பிற அங்கத்தினர்களுக்கும் இது ஓர் நன்மாதிரி என்றெண்ணுகிறோம்.

பாண்டிய நாட்டு ஆனரபில்கள்:— இராமநாதபுரம் ராஜா ஸ்ரீ ராஜராஜேச்வர சேதுபதி அவர்கள் போட்டியின்றியும், ஸ்ரீ கே. ராமையங்கார் பி. ஏ. பி. எல். பெரும்பான்மையோரது விருப்பின் பேரிலும், ஸ்ரீ ராவ் பஹதூர் எஸ். ஆர். எம். எம். ஏ. அண்ணாமலை செட்டியாரவர்கள் துரைத்

தனத்தராது வேண்டுகோட்கிணங்கியும், சென்னைச்சட்டநிரூபணசபையங்கத்தின ராயினமை அறிந்து மகிழ்கின்றோம். இம்மூவரும தம் பொறுப்புணர்ந்து ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் நலம் புரிபவர்களே.

கலாசாலை விஷயங்கள்:— காலஞ்சென்ற ஸ்ரீமான் எ. மாதவையர் பி. எ. பி. எல். அவர்கள் ஸ்தானத்தில் அவருடன் உதவியோக முறையில் ஒத்து உழைத்து வந்த, ஸ்ரீ. வி. ஸ்ரீநிவாஸராவ ஸாஹிப் பி.எ பி.எல். அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது எவாக்கும் திருப்தியைவிளைவிக்கின்றது.

விவேகோதயத்தைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்.

இவ்வரிய பத்திரிகைக்கு ஸ்ரீமான் ம. கோபால கிருஷ்ணையரவர்களும் ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களும் பத்திராதிபர்களாயிருந்து செவ்வனே நடத்திவருகிறார்கள்:—

இதற்கு விஷயதானம் செய்வோர்கள் கல்வியில் தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகை அம்மாளும் மாதாமாதம் விஷயதானம் செய்ய ஒப்புககொண்டுள்ள தறிந்து சந்தோஷிக்கிறோம். இப்பத்திரிகை காலக்கிரமத்தில பொதுவாக நம் ஜனங்களுககும, முக்கிய மாக தமிழுமாணவாகளுக்கும் பிரயோசனகர முள்ள தாக இருக்கும் என்பதில் ஸந்தேகம் இல்லை. இதற்கு வருஷசந்தா ரூ 1—8—0. இவ்வளவு குறைவான சந்தா இவர்களுக்கு எப்படித்தான் கட்டுமோ என்று நமக்கு ஸந்தேகம் ஜனிக்கிறது. சந்தாவின் குறைவைக் கவனித்தும் பத்திரிகையில் உள்ள அரியவிஷயங்களைக் கவனித்தும், ஜனங்கள் இதை ஆதரிக்க வேண்டு மெனக் கோருகிறோம். பொஙகும மங்களம் தஙகுக.—பெண் கல்வி, சென்னை.

"தங்கள் பத்திரிகை ஒன்றே என்னால் விரும்பப்படும் பத்திரிகை"

வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள்,
பிரம்பூர்.

விவேகோதய முக்கிய அறிவிப்பு.

வருட சந்தா:— 1916ஞ செப்டம்பரீ 30உ வரை ரூ 1—8—0. அக்டோபர்மீ முதல் ரூ 2—0—0. மாணவர்க்கும் பெண்பாலர்க்கும் அக்டோபர்மீ 1உ வரை ரூ 1. அதன்பிறகு ரூ 1—8—0.

ஆகையால், வேண்டுவோர் உடனே மணியார்டர் செய்து பத்திரிகை பெறுக. மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் 2 அணு ஸ்டாம்பு அனுப்புக. பதில் வேண்டுவோர் ரிப்ளைகார்டு அல்லது லேபில் அனுப்புக.

விளம்பர விகிதம்:— இது காறும் விதிக்கப் பட்டுள்ள விளம்பர விகிதம் இப்பொழுது விளம்பரம் செய்து வருவோர்க்கே. செப்டம்பர்மீ 30உ முதல் பக்கத்திற்குப் பிரதி மாதமும் விளம்பர விகிதம் ரூ 5. சகாய விகிதம் நீண்டகால விளம்பரங்களுக்கு.

மானேஜர், "விவேகோதயம்",
மதுரை.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு:—இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:— அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பல உபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக் கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:— இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத் தக்க விதத்தில் கூறப்பட்டுள்ளன. இது விரைவில் வெளிவரும்.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பிரம்பூர், சென்னை.

இனாம்! இனாம்!!

உங்களுக்கு நாவல்களில் பிரியமா?

இல்லையேல்.
தபால் சார்ஜுக்கு
அரையணாஸ்டாம்புடன்
உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள்.
எங்களால் பிரசுரித்து வெளிப்படுத்தப்பட்ட

ம்ருணாலினி

என்னும் ஓர் இனியதமிழ் நாவல்

இனாமாக அனுப்பப்படும்.

தாமதிக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். சொற்பப் பிரதிகளே அச்சிட்டமையால் முந்தியவர்களுக்கு மாத்திரமேதான் கிடைக்கும்.

மானேஜர்,

இந்தியன் அட்வர்டைஸர், புதுவை

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.